**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 23.07.2024**

**Case No : CC 205 / 2019**

**Deposition of Witness : P.W. 1**

| | |
|---|---|
| **Name:** சிலுவை பிரகாசி | **Caste:** |
| **Father / Husband Name:** சிலுவை அந்தோணி | **Calling:** |
| **Village:** பிரகாசபுரம் | **Religion:** |
| **Taluk:** ஏரல் | **Age: 67** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 23.07.2024**

<u>முதல் விசாரணை:</u>

நான் பிரகாசபுரத்தில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எனது ஊரை சேர்ந்தவர்கள். எனக்கும் எதிரிகளுக்கும் தெருபைப்பில் தண்ணீர் பிடிப்பது சம்பந்தமாக பிரச்சனை உண்டு. கடந்த 1.7.2018 ம் தேதி மாலை 4.45 மணிக்கு நான் என் வீட்டில் இருந்தபோது எதிரி சுதாகர் அங்கு வந்து தேவடியா என்று ஆபாசமாக பேசினார். உடனே என் கணவர் எதிரியை சத்தம் போட்டார். பக்கத்து வீட்டிலிருந்த எதிரி ஜெகன் ஓடிவந்து என் கணவரை செவிட்டில் அடித்தார். சம்பவத்தை பார்த்த என் மகன் அந்தோணி மிக்கேல் சேவியர் மற்றும் அருகிலுள்ளவர்கள் சத்தம்போட்டு விலக்கிவிட்டார்கள். இதுசம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

2 ம் எதிரி ஜெகன் சாரோனின் ரோஜா என்ற பெயரில் திசையன்விளையில் சபை நடத்தி வருகிறார் என்றால் தெரியாது. எனக்கும் 2 ம் எதிரிக்கும் எந்த முன்விரோதமும் இல்லை என்றால் சரிதான். என் வீட்டிற்கு நேர் எதிர் வீடு 2 ம் எதிரியின் வீடு என்றால் சரிதான். 1 ம் எதிரி சுதாகர் வீடு பிரகாசபுரத்தில் தென்வடல் தெரு தாண்டி கிழக்குபுறம் உள்ளது என்றால் தெற்கு புறம் உள்ளது.

சம்பவ சமயத்தில் நான் வார்டு மெம்பராக இருந்தேன் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும் 1ம் எதிரி சுதாகர் வீட்டிற்கும் வேறு தண்ணீர் பைப் இணைப்பு என்றால் சரிதான். மனோரஞ்சிதத்தின் வீடு 1ம் எதிரியின் வீட்டு பக்கம் உள்ளது என்றால் சரிதான். அந்தோணி சவரிமுத்து வீடு ஆர்சி கோவில் பக்கம் உள்ளது என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் காவல்நிலையத்தில் எழுதினார்கள். அப்போது என்னுடன் என் மகன் மற்றும் கணவர் வந்திருந்தார். புகாரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல. புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எங்கள் மீது எதிரிகள் புகார் அளித்து சிசி 121/18 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அவர்கள் புகார் அளித்து என் மகன் மற்றும் கணவர் தலைமறைவாக இருந்தார்கள் என்றால் இல்லை. ஊரில் இருந்திருந்தால் அன்றே காவல்துறையினர் கைது செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் இருவரும் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததற்கு பின்னிட்டு நான் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என் வீட்டிலிருந்து தட்டார்மடம் காவல்நிலையம் 3 கிமீ தொலைவிருக்கும் என்றால் 2 1/2 கிமீ தொலைவிருக்கும். அதனால் காவல் நிலையத்திற்கு 10 நிமிடத்தில் சென்று விடலாம் என்றால் 25 நிமிடம் ஆகும். ப.சா.6 மனோரஞ்சிதம் என் கணவர் சொல்லி பிரகாசபுரத்திற்கு வந்தார் என்றால் இல்லை. ப.சா.5 அந்தோணி சவரிமுத்து என் கணவரின் அண்ணன் மகன் என்றால் இல்லை. என் கணவரின் பெரியப்பா மகன் ஆவார். புகாரில் என் கணவர் மற்றும் மகன் எதிரிகளை கீழே தள்ளியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. அதனால் எதிரிகள் இருவருக்கும் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிகளை அருவாளால் தாக்கி காயம் ஏற்படுத்தி அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வார்டு மெம்பராக இருந்ததால் என் அதிகாரத்தை பயன்படுத்தி பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(Sd)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 23.07.2024**

**Case No : CC 205 / 2019**

**Deposition of Witness : P.W. 2**

| | |
|---|---|
| **Name:** சிலுவை அந்தோணி | **Caste:** |
| **Father / Husband Name:** அருளப்பன் | **Calling:** |
| **Village:** பிரகாசபுரம் | **Religion:** |
| **Taluk:** ஏரல் | **Age: 65** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 23.07.2024**

<u>முதல் விசாரணை:</u>

நான் பிரகாசபுரத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். என் மனைவி ஆவார். எதிரிகளை தெரியும். எனது ஊரை சேர்ந்தவர்கள். எங்களுக்கும் எதிரிகளுக்கும் தெருபைப்பில் தண்ணீர் பிடிப்பது சம்பந்தமாக பிரச்சனை உண்டு. கடந்த 1.7.2018 ம் தேதி மாலை 4.45 மணிக்கு அ.சா.1 வீட்டில் இருந்தபோது எதிரி சுதாகர் அங்கு வந்து தேவடியா என்று ஆபாசமாக பேசினார். உடனே நான் எதிரியை சத்தம் போட்டேன். பக்கத்து வீட்டிலிருந்த எதிரி ஜெகன் ஓடிவந்து என்னை செவிட்டில் அடித்தார். சம்பவத்தை பார்த்த என் மகன் அந்தோணி மிக்கேல் சேவியர் மற்றும் அருகிலுள்ளவர்கள் சத்தம்போட்டு விலக்கிவிட்டார்கள். இதுசம்பந்தமாக அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

புகார் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் காவல்நிலையத்தில் வைத்து எழுதினார்கள். புகார் கொடுக்கும்போது யார் இருந்தார்கள் என்று தெரியாது, நான் காவல் நிலையத்தில்தான் இருந்தேன். என் வீட்டிலிருந்து தட்டார்மடம் காவல்நிலையம் 3 கிமீ தொலைவிருக்கும் என்றால் தெரியாது. என் வீட்டிலிருந்து காவல்நிலையம் 10 நிமிடத்தில் சென்று விடலாம் என்றால் இல்லை. 1ம் எதிரி சுதாகர் வீடு பிரகாசபுரத்தில் தென்வடல் தெரு தாண்டி கிழக்குபுறம் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும் 1ம் எதிரி சுதாகர்

வீட்டிற்கும் வேறு தண்ணீர் பைப் இணைப்பு என்றால் சரிதான். ப.சா.6 மனோரஞ்சிதம் வீட்டின் அருகே 1ம் எதிரி வீடு உள்ளது என்றால் சரிதான். அந்தோணி சவரிமுத்து வீடு ஆர்சி கோவில் அருகே உள்ளது என்றால் சரிதான். புகார் அளித்ததற்கு பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. ப.சா.6 மனோரஞ்சிதம் என் மூலமாகத்தான் பிரகாசபுரம் வந்தார் என்றால் இல்லை. ப.சா.5 அந்தோணி சவரிமுத்து என் அண்ணன் மகன் என்றால் அந்த உறவுமுறை ஆவார். நாங்கள் எதிரிகளை தாக்கியதாக சிசி 121/18 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதனால் நானும் என் மகனும் தலைமறைவாக இருந்தோம் என்றால் இல்லை. அவ்வாறு ஊரில் இருந்தால் அன்றே காவல்துறையினர் கைது செய்து விடுவார்கள் என்றால் சரியல்ல. அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக அ.சா.1 பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(Sd)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 23.07.2024**

**Case No : CC 205 / 2019**

**Deposition of Witness : P.W. 3**

| | |
|---|---|
| **Name:** அந்தோணி மிக்கேல் சேவியர் | **Caste:** |
| **Father / Husband Name:** சிலுவை அந்தோணி | **Calling:** |
| **Village:** பிரகாசபுரம் | **Religion:** |
| **Taluk:** ஏரல் | **Age: 42** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 23.07.2024**

முதல் விசாரணை:

நான் பிரகாசபுரத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் 2 ஐ தெரியும். என் பெற்றோர் ஆவர். எதிரிகளை தெரியும். எனது ஊரை சேர்ந்தவர்கள். எங்களுக்கும் எதிரிகளுக்கும் தெருபைப்பில் தண்ணீர் பிடிப்பது சம்பந்தமாக பிரச்சனை உண்டு. கடந்த 1.7.2018 ம் தேதி மாலை 4.45 மணிக்கு நான் தோட்டத்தில் இருந்தேன். அப்போது எதிரிகள் என் அம்மாவையும் அப்பாவையும் அடிப்பதாக கேள்விப்பட்டு வீட்டிற்கு வந்தேன். அப்போது அங்கு எதிரிகள் இருந்தார்கள். நான் அவர்களை சத்தம்போட்டு விலக்கிவிட்டேன். நான் என் பெற்றோரிடம் விசாரித்தபோது எதிரிகள் ஆபாசமாக பேசி என் அப்பாவை கன்னத்தில் அடித்ததாக சொன்னார்கள். இதுசம்பந்தமாக அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

புகாரை யார் எழுதினார்கள் என்றால் தெரியாது. புகார் கொடுக்கும்போது நான் மற்றும் என் அப்பா ஆகியோர்களும் அங்கு இருந்தோம். என் வீட்டிலிருந்து தட்டார்மடம் காவல்நிலையம் 3 கிமீ தொலைவிருக்கும் என்றால் சரிதான். 1ம் எதிரி சுதாகர் வீடு பிரகாசபுரத்தில் தென்வடல் தெரு தாண்டி கிழக்குபுறம் உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரி சுதாகர் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் வேறு தண்ணீர் பைப் இணைப்பு என்றால் சரிதான். ப.சா.6 மனோரஞ்சிதம் வீட்டின் அருகே 1ம் எதிரி வீடு உள்ளது என்றால் சரிதான்.

ப.சா.5 அந்தோணி சவரிமுத்து வீடு ஆர்சி கோவில் வீடு அருகில் உள்ளது என்றால் சரிதான். புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அந்தோணி சவரிமுத்து என் தந்தை அ.சா.2 ன் அண்ணன் மகன் என்றால் சரிதான். புகாரில் நானும் அ.சா.2 ம் எதிரிகளை தள்ளிவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. புகாரில் எதிரிகள் இருவருக்கும் காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. அ.சா.1 பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகள் புகார் அளித்த பின்பு நானும் அ.சா.2 ம் தலைமறைவாக இருந்தோம் என்றால் இல்லை. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ப.சா.6 மனோரஞ்சிதம் என் தந்தை அ.சா.2 ன் மூலமாகத்தான் பிரகாசபுரம் வந்தார் என்றால் சரிதான். அ.சா.1 என் தாயார் என்பதால் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(Sd)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.